(17)

1011

Register Number | | | | | |

# பகுதி I — தமிழ் — இரண்டாம் தாள்

( உரைநடை, துணைப்பாடம், செய்யுள் நயம் பாராட்டல், தமிழாக்கம், படைப்பாற்றல், மொழித்திறன் )

# Language — Part I — TAMIL — Paper II

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 80

குறிப்பு : விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும் மற்றும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

I. பின்வரும் வினாக்களுள் எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் ஒவ்வொன்றிற்கும் பத்து வரிகளின் மிகாது விடை எழுதுக : $3 \times 4 = 12$

1. தமிழ் உயர்மொழி, தனிமொழி என்று உரைக்கப்படக் காரணங்கள் யாவை ?

2. உலகில் சமரசம் பரவாமைக்குக் காரணங்களாகத் திரு.வி.க. கூறுவன யாவை ?

3. கீட்ஸ், ஜான்ரஸ்கின், பவணந்தி முனிவர் ஆகியோர் கூறும் கவிதையின் இயல்புகள் யாவை ?

4. பழந்தமிழ் மக்கள் மேற்கொண்ட தொழில்களைப் பற்றி எழுதுக.

5. ஈகைப்பண்பில் தமிழ்மக்கள் சிறந்து விளங்கிய தன்மையை விளக்கு.

[ Turn over

www.kalvisolai.com - 2 of 8.



II. பின்வரும் வினாக்களுள் எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் ஒவ்வொன்றிற்கும் பத்து வரிகளின் மிகாது விடை தருக : 3 × 4 = 12

6. விரவுப் பெயராக இலக்கணத்திற் சொல்லப்படுவன மாடுகளின் பெரும்பயன் கருதியே - என்று பாவாணர் கூற்றினை விளக்குக.

7. ஆ தெய்வத்தன்மையுடையது என்பதனை எடுத்துக்காட்டுக.

8. உவமைகளைக் கையாளும் வித்த்திலேயே திருவள்ளுவர் நயமுண்டாகக் குறளமைத்திருப்பதை விளக்குக.

9. ஏற்றத்தாழ்வில்லாத சமுதாயம் அமைய மு.வ. காட்டும் வழிகள் யாவை ?

10. தமிழகக் குடைவரைக் கோவில்களைப் பற்றி எழுதுக.

III. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் **ஒன்றனுக்கு** மட்டும் இருபது வரிகளின் மிகாது விடை எழுதுக : 1 × 6 = 6

11. நாடு, சமயம், சாதி இவற்றை அடிப்படையாகக் கொண்டு சமரச உணர்வினின்று மாறுபடுதல் தவறாம் என்று திரு.வி.க. வாதிடுவதனை விளக்குக.

12. தேர்தல் முறைகள் பற்றி மு.வ. எடுத்துரைக்கும் கருத்துக்கள் யாவை ?

www.kalvisolai.com - 3 of 8.



IV. பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் விடை எழுதுக : 2 × 10 = 20

13. 'பால்வண்ணம் பிள்ளை' அல்லது 'சட்டை' என்னும் சிறுகதையின் கருப்பொருளும், சுவையும் குன்றாமல் சுருக்கி வரைக.

அல்லது

'வேலி' அல்லது 'மகன்' என்னும் சிறுகதையில் இடம்பெறும் ஏதேனும் ஒரு நிகழ்ச்சியை நாடகமாக எழுதுக.

14. 'மண்' அல்லது 'ஓர் உல்லாசப் பயணம்' என்னும் சிறுகதையில் நும் மனம் கவர்ந்த கதைமாந்தர் குறித்துத் திறனாய்வு செய்க.

அல்லது

சொந்த வீட்டில் வாழ வேண்டும் என்ற ஆசை தோன்றியது. ஆசை நிறைவேற ஆயிரம் இடையூறுகள் மனம் சோர்வடையவில்லை. முயற்சி தொடர்ந்தது ..... ஆசை நிறைவேறியதா ? கற்பனைக் கதையொன்று எழுதுக.

அல்லது

கிட்டு தன் தமையன் தனக்கு செய்த உதவிகளை நினைத்து மகிழ்வது போல் ஒரு கற்பனைக் கதை எழுதுக.

[ Turn over

www.kalvisolai.com - 4 of 8.



V. 15. பின்வரும் செய்யுளைப் படித்துணர்ந்து, அதில் அமைந்துள்ள மையக் கருத்தை நயத்துடன் எடுத்துரைத்து, அதில் அமைந்துள்ள எதுகை, மோனை, இயைபு, முரண், அணி, சந்தச்சுவை, உவமை, உருவகம், கற்பனை ஆகியவற்றுள் ஏற்புடையவற்றைச் சுட்டி எழுதுக.

1 × 10 = 10

செந்தமிழ் நாடெனும் போதினிலே - இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே - எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே - ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே !

காவிரி தென்பெண்ணை பாலாறு - தமிழ்
கண்டதோர் வையை பொருனைநதி - என
மேவிய ஆறுபல ஓடத் - திரு
மேனி செழித்த தமிழ்நாடு !

வள்ளுவன் தன்னை உலகினுக்கே - தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு - நெஞ்சை
அள்ளும் சிலப்பதி காரமென்றோர் - மணி
ஆரம் படைத்த தமிழ்நாடு !

– பாரதியார்

குறிப்பு : காது கேளாத மாணவர்களுக்கு மட்டும் கீழ்க்கண்ட **VI** மற்றும் **VII** வினாக்களுக்கு மாற்று வினா வழங்கப்பட்டுள்ளன.

VI. பின்வரும் தொடர்களில் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் தமிழாக்கம் தருக. 3 × 2 = 6

16. Work is worship

17. Hear much, speak little.

18. Experience is the best teacher.

19. Slow and steady wins the race.

20. One flower makes no garland.

21. An ideal teacher is a friend, philosopher and guide of the students.

VII. 22. பின்வரும் பழமொழிகளுள் ஒன்றினை விளக்கும் வகையில், வாழ்க்கை நிகழ்வில் அமைத்துப் பத்து வரிகளில் எழுதுக. 1 × 4 = 4

அ) ''சுடர் விளக்காயினும் தூண்டுகோல் ஒன்று வேண்டும்''

ஆ) ''தன் கையே தனக்கு உதவி''

இ) ''ஆற்றில் போட்டாலும் அளந்து போடு''

*அல்லது*

'*பொதுநலம் போற்றுவோம்*' அல்லது '*மரம் வளர்போம்*' என்னும் தலைப்பில் உமது சொந்தப் படைப்பாகக் கவிதை ஒன்றை எட்டு அடிகளுக்கு குறையாது பத்து அடிகளுக்கு மிகாது எழுதுக.

*குறிப்பு :* **காது கேளாத மாணவர்களுக்கான மாற்று வினா**

VI மற்றும் VII-ல் உள்ள வினாக்களுக்குப் பதிலாக காது கேளாத மாணவர்கள் பின்வரும் பத்தியை கவனமாகப் படித்து கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு வினா எண் 16 முதல் 22 வரையில் உள்ளவற்றில் எவையேனும் **ஐந்தனுக்கு** மட்டும் உகந்த விடையை எழுதுக. 5 × 2 = 10

இயல், இசை, நாடகம் என மூவகையில் அமையும் முத்தமிழில் கடைசியாக அமைவது நாடகம். நாடகத்தைப் 'பாமர மக்களின் பல்கலைக்கழகம்' என்பர். நாடகவேந்தர் டி. கே. சண்முகம் அவர்கள் பார்த்தும் கேட்டும் மகிழத்தக்கது நாடகம் என்பர். இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நாடகத்தைக் கூத்து என்றும், நடிகர்களைக் கூத்தாடி என்றும் அழைத்தனர். சங்க இலக்கிய ஆற்றுப்படை

[ Turn over

www.kalvisolai.com - 6 of 8.



நூல்களுள் கூத்தராற்றுப்படையும் ஒன்றாகும். மேலும் திருக்குறள் 'கூத்தாட்டவைக் குழாத்தற்றே' என நாடகம் நடைபெறும் இடத்தைக் கூத்தாட்டவை என்றே குறிப்பிடுகிறது.

நாடக அமைப்பு முறையை முதற்கண் விரிவாகச் சுட்டும் நூல் சிலப்பதிகாரமாகும். நாடகத்தை நடிக்க மட்டும், படிக்க மட்டும், நடிக்க படிக்க இரண்டிற்கும் என மூவகையாகப் பகுப்பர். மேலும் நாடகத்தின் கதையடிப்படையில் நாடகம் இன்பியல், துன்பியல் என இரண்டு வகைப்படும்.

தமிழ்நாட்டில் கிடைத்த முதல் நாடகம் பல்லவமன்னன் மகேந்திரவர்மன் எழுதிய மத்தவிலாசப்பிரகசனம். இது வடமொழியில் அமைந்தது. இராசராச சோழனைப் பற்றி இராஜராஜ விஜயம் என்னும் நாடகம் தஞ்சைப் பெரிய கோயிலில் நடந்ததாகக் கல்வெட்டுச் செய்திகள் கூறுகின்றன.

*வினாக்கள் :*

16. 'பாமர மக்களின் பல்கலைக்கழகம்' எது ?
17. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நாடகத்தையும் நடிகர்களையும் எவ்வாறு அழைத்தனர் ?
18. நாடகம் நடைபெறும் இடத்தைத் திருக்குறள் எவ்வாறு குறிப்பிடுகிறது ?
19. நாடக அமைப்பு முறையை முதற்கண் விரிவாகச் சுட்டும் நூல் எது ?
20. நாடகத்தின் கதையடிப்படையில் நாடகம் எத்தனை வகைப்படும் ?
21. தமிழ் நாட்டில் கிடைத்த முதல் நாடக நூலின் பெயரினைக் கூறு.
22. இராசராச சோழனைப் பற்றித் தஞ்சைப் பெரிய கோயிலில் நடந்த நாடகத்தின் பெயர் என்ன ?

www.kalvisolai.com - 7 of 8.



VIII. பின்வரும் வினாக்களுக்கு அடைப்புக் குறிகளுக்குள் குறிப்பிட்டுள்ளவாறு விடை எழுதுக : 10 × 1 = 10

23. சென்னைக்கு அருகாமையில் இருப்பது கன்னியாகுமரி அல்ல.

( தொடரில் உள்ள வாக்கியப் பிழையைத் திருத்துக )

24. எதையும் எழுதி பழக வேண்டும் என்று எனக்கு சொன்னார் ஆசிரியர்

( ஏற்ற இடங்களில் வல்லின மெய்களை இட்டு எழுதுக )

25. 'இலை' - 'இழை' அல்லது 'வாழை' - 'வாளை'

( சொற்களின் பொருள் வேறுபாட்டை உணர்த்தும் வகையில் தனித்தனி வாக்கியங்களில் அமைத்து எழுதுக )

26. டயாபெட்டிக் பேஷண்ட் ஸ்வீட் சாப்பிடுவதை ஸ்டாப் செய்ய வேண்டும்.

( ஆங்கிலச் சொற்கலப்பை நீக்கி இனிய தமிழில் எழுதுக )

27. 'நமஸ்காரம்' என்று சாஷ்டாங்கமாக விழுந்தவனை ஆசீர்வதித்தேன்.

(வடமொழிக் கலப்பினை நீக்கி எழுதுக )

28. விலக்கு நன்றாக எறிந்தது.

( எழுத்துப் பிழைகளைத் திருத்தி எழுதுக )

29. கபிலபரணர் வளர்பிறை ஒளியில் சுடுச்சோறும் காய்க்கறியும் உண்டனர்.

( தேவையற்ற இடங்களில் வல்லின மெய்களை நீக்கி எழுதுக )

30. சோறு தின்று பழம் உண்டு பால் சாப்பிட்டுப் படுத்தேன்.

( மரபு வழுஉச் சொற்களை நீக்கி திருத்தமாக எழுதுக )

www.kalvisolai.com - 8 of 8.



31. அப்பிசி மாசம் அடமள இம்பாங்க.

( கொச்சைச் சொற்களைத் திருத்தி எழுதுக )

32. ஒழுக்கமுடைடமை குடிமை என்பது திருவள்ளுவர் வகுத்த வரையறையாகும்

( பொருத்தமான நிறுத்தற் குறிகளை இட்டெழுதுக).